மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 645/2022 |
| பெயர் | : | ரவி (PW3) |
| த/பெ. | : | சண்முகநாடார் |

(Accused is present. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of March 2023

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** ( மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை)( சாட்சிக்கு அவரது முதல் விசாரணை படித்துக் காண்பிக்கப்பட்டது)

1) விபத்தில் இறந்துபோன ஆறுமுகசாமி என் உறவினர். அசா 1 என் ஊர்க்காரர். விபத்து எங்கு வைத்து நடந்தது என்றால் தட்டப்பாறை ரோடு வள்ளிநாயகபுரம் பாலத்தில் இருந்து 100-120 மீட்டருக்குள் நடந்தது. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் நினைவில் இல்லை.

2) விபத்து நடந்தபோது நான் எங்கிருந்தேன் என்றால் நானும் என் மனைவியும் நடைபயிற்சி சென்று கொண்டிருந்தோம். அசா 1ம் ஆறுமுகசாமியும் எங்களுக்கு எதிராக தெற்கு நோக்கி வந்தார்கள். மேற்படி விபரத்தை நான் போலிசாரிடம் சொன்னேனா என்றால் நினைவில் இல்லை. இந்த வழக்கில் என்னை சாட்சியாக சேர்த்த விபரம் எனக்கு நினைவில் உள்ளதா என்றால் இல்லை.

3)இறந்து போனவரின் மகனுக்கு இறந்து போனவரின் மொபைலில் இருந்து போன் செய்தேன். சம்பவ இடத்தில் இருந்து நான் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 20 நிமிடங்கள் இருந்தேன். அப்போது போலிசார் அங்கு வந்தார்களா என்றால் நினைவில் இல்லை. இறந்து போனவரை விட்டு விட்டு காய்ம பட்ட அசா 1 ஐ தான் 108 ஆம்புலன்ஸ்சில் அழைத்துசசென்றார்களா என்றால் சரிதான். அசா 1 உடன் வேறு யாரேனும் 108 அம்புலன்ஸில் உடன் சென்றார்களா என்றால் நினைவில் இல்லை. இறந்து போனவரை எப்போது மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றால் காலை 6.00 மணி

இருக்கும் . எந்த வாகனத்தில் அழைத்து சென்றார்கள் என்றால் நான் பார்க்கவில்லை.

4) இறந்துபோனவரின் குடும்பத்தினர் அங்கு வந்தார்களா என்றால் அவரது மகன் வந்தார். முதல் விசாரணையில் நான் சொன்ன விசயங்கள் பொய்யான தகவல்கள் என்றால் சரியல்ல. இறந்து போனவர் என்னுடைய உறவினர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.